பதிவு எண் M. 4729

தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ பியாரேலால்ஜியால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

17] சென்னை—ஞாயிறு, ஆகஸ்ட் 4, 1946. [விலை. அணா. 2

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்

நான் பம்பாயில் நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்குப் போகும்போது ஜூலை 6-ந் தேதி என்னுடைய மோட்டார்காருக்குள் அச்சடித்த ஒரு துண்டுப் பிரசுரம் எறியப்பட்டது. அதையே திரு. ராஜபோஜ் என் கையில் 12-ம் தேதி கொடுத்தார். அந்தப் பிரசுரம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்க்காக எழுதப் பட்டதாகும். அதைக் குறித்து ஹரிஜனில் எழுதுவதாக நான் வாக்களித்தேன். அதை இப்பொழுது நிறைவேற்றுகின்றேன்.

அங்கத்தினர்கள் பதில் கூற வேண்டிய கேள்விகளாகத் தோன்றவில்லை. ஒரு அங்கத்தினர் கூடப் பதில் கூறவில்லை என்றால் நான் ஆச்சரியப் படமாட்டேன். அவற்றைத் தயாரித்தவர்க்குக் காங்கிரஸ் சரித்திரம் கொஞ்சம் கூடத் தெரியாது என்று தெரிகிறது. ஒரு குறிப்பிட்ட விஷயத்தை ஆராய்வதற்காகக் கூடியுள்ளவர்கள் அதற்குப் புறம்பான விஷயங்களைக் கவனிக்க முடியாது. ஆனால் அறியாதவர்களுக்கு அறிவு புகட்டுவது பத்திரிகைகளின் கடமையாகும். நான் ஒரு வாரப் பத்திரிகையை நடத்துவதாலும், ஹரிஜனாக ஆகி யிருப்பதாலும் இந்தக் கடமை என் விஷயத்தில் இரட்டிப்பாகும்.

கேள்வி :—தாங்கள் அமைக்கப் போகும் சுயராஜ்யத்தில் தீண்டாதவர்களுடைய ஸ்தானம் யாது? காங்கிரஸ் மகா சபையானது சிறுபான்மையோரைக் காப்பாற்றும் விஷயமாக இதற்குமுன் பிரமாதமாக அளந்திருக்கிறது. அப்படி யிருக்க அது சிறுபான்மையோருடைய பாதுகாப்புக்காக ஏற்படுத்தி யுள்ள திட்டத்தை ஏன் வெளியிடாதிருக்கின்றது? இப்படி வெளியிடாதிருப்பது காங்கிரஸ் உண்மையாகவே தீண்டாதவர்க்கு உதவி செய்ய விரும்புகிறது என்ற விஷயத்தில் சந்தேகம் உண்டாக இடம் தருகிற தல்லவா?

பதில் :—நான் அமைக்க விரும்பும் சுயராஜ்யத்தில் ஜாதிஹிந்துக்களுக்கு எந்த ஸ்தானம் உண்டோ அந்த ஸ்தானம் தீண்டாதவர்களுக்கும் உண்டு. அதுதான் காங்கிரஸின் கொள்கையுமாகும். எனக்குத் தெரிந்த இதர பல வகுப்பார் கொண்ட ஸ்தாபனங்களை விட அதுவேதான் தீண்டாதவர்களுக்காகக் குறைவாகப் பேசி நிறைவாகக் காரியங்கள் செய்திருக்கின்றது. செய்யும் காரியமே போதிய சான்றாக யிருக்கும் போது திட்டம் எதுவும் வெளியிட வேண்டிய அவசியம் கிடையாது.

கேள்வி :—காங்கிரஸ் மகா சபை தீண்டாதவர்களைச் சிறுபான்மையோராக மதிக்கின்றதா? தீண்டாதவர்கள்தான் இந்தியாவில் உண்மையான சிறுபான்மையினர் என்பதைத் திரு. காந்தி 1939-ம் வருஷத்தில் ஹரிஜன் பத்திரிகையில் ஒப்புக் கொண்டார். அப்படி யிருக்க மௌலானா ஆஜாத் தாம் வைசிராய்க்கு எழுதிய இறுதிக் கடிதத்தில் காங்கிரஸ் தீண்டாதவர்களைச் சிறுபான்மை வகுப்பினராக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று எழுதியதன் காரணம் யாது?

பதில் :—பார்ஸியரும், யூதரும், கிறிஸ்தவரும் தங்களைச் சிறுபான்யோராகச் சொல்லிக் கொள்ளக் கூடிய அர்த்தத்தில் தீண்டாதவர்கள் சிறுபான்மையோர் ஆகமாட்டார்கள். காங்கிரஸ் மகா சபை தீண்டாதவர்களைச் சிறுபான்மையோராக மதிக்கக் கூடாது என்பதற்கு அந்தக் காரணம் ஒன்றே போதும். நாம் பிராமணர்களையும் க்ஷத்திரியர்களையும், வைசியர்களையும் சிறுபான்மையோராகவும் சூத்திரர்களைப் பெரும்பான்மையோராவும் கூறுவோமானால் அப்போதுதான் ஹரிஜனங்களைச் சிறுபான்மையோராகச் சொல்ல முடியும். ஆனால் சிறுபான்மையோர் பெரும் பான்மையோர் என்று வழங்கும் ரீதியில் இவர்களை சிறுபான்மையோர் என்றும் பெரும்பான்மையோர் என்றும் கூற முடியாது. அதிர்ஷ்டவசமாக நாம் இன்னும் அந்த நிலைமையை அடைந்து விட வில்லை. அந்த நிலைமைக்கு வந்து விட்டால் அப்புறம் சுயராஜ்யத்துக்கு விடை கொடுத்து அனுப்பி விட வேண்டியதுதான். ஆங்கிலேயர் இன்று போகா விட்டாலும் என்றேனும் போகத்தான் போகிறார்கள். ஆனால் நாம் ஒருவர் கழுத்தை ஒருவர் அறுக்கும் காட்டு மிராண்டிகளாக ஆகி விட்டால் காட்டுமிராண்டிகளுக்குத் தகுந்த சுதந்திரத்தைத் தான் பெறுவோம்.

1939-ம் வருஷத்தில் நான் ஹரிஜனில் எழுதியதாகச் சொல்லும் விஷயத்தை பம்பாய் மாகாணத் தீண்டாதார் சம்மேளனத்தின் தலைவர் தான் இந்தத் துண்டுப் பிரசுர கர்த்தர்களுக்குச் சொல்லி யிருக்க வேண்டும் ஆனால் அவர் அந்த "ஹரிஜன்" இதழின் நம்பரையும் பக்கத்தையும் தந்தாரில்லை. நான் கூறியதாகச் சொல்லும் விஷயத்தை நான் கூறியதாக எனக்கு ஞாபகமில்லை. நான் 1939-ம் வருஷத்தில் அவ்வாறு எழுதி யிருந்தாலும் எழுதி யிராவிட்டாலும் மௌலானா சாகேப் சொன்னதாகச் சொல்லப்பட்டிருப்பது சந்தேகமறச் சரியானதே.

கேள்வி :—காங்கிரஸ் மகா சபை தீண்டாதவர்களைச் சிறுபான்மையோராகக் கருதவில்லை என்று கூறுவதன் பொருள்தான் யாது? இப்பொழுது நடைமுறையிலுள்ள இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி தீண்டாதவர்களுக்குக் கிடைத்துள்ள அரசியல் பாதுகாவல்களையும் கூடக் காங்கிரஸ் பறித்துவிடும் என்பதுதான் அதன் பொருளோ?

பதில் :—தீண்டாதவர்கள் ஹிந்து சமூகத்தில் பிரிக்க முடியாத ஒரு பகுதியினர் என்பதே அதன்பொருள். ஆதலால் அவர்கள் சிறுபான்மையோர் நிலைமையை விட நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களை ஒரு தனிச் சமூகமாகச் சொல்லிக் கொண்டாலும் ஆக்கிக் கொண்டாலும் சிறுபான்மையோர் நிலைமையை விடத் தாழ்ந்த நிலைமையிலேயே யிருப்பார்கள். ஏதோ படித்த சில தீண்டாதவர்கள்

ஒரு தனி வகுப்புப் போல் வேறாகப் பிரிந்திருந்து கொள்ளலாம். ஆனால் தீண்டாதவர்களில் பெரும் பான்மையோர் ஜாதி ஹிந்துக்களோடு இருந்து தீர வேண்டும். ஜாதி ஹிந்துக்கள் உயர்ந்தால் இவர்களும், உயர்வார்கள். ஜாதி ஹிந்துக்கள் தாழ்ந்தால் இவர்களும் தாழ்ந்து போவார்கள். ஜாதி ஹிந்துக்களும் தீண்டாதவர்கள் என்று சொல்லப்படும் ஹரிஜனங்களிடம் இப்பொழுது நடந்து வருவது போல இனியும் தவறாக நடந்து வருவார்களானால் அவர்கள் மனித குடும்பத்தில் ஒரு தனிக்கிளையாக இருக்கமாட்டார்கள். கேள்வி கேட்பவர் அரசியல் பாதுகாப்புக்கள் என்று எவற்றைச் சொல்கிறாரோ தெரியவில்லை.

தனித் தொகுதிகளைக் குறிப்பிடுவாரேயானால் அவை அறவே ஒழிந்து தீரவேண்டியவைதான். அவை ஏகாதிபத்தியம் என்ற பெயருடைய சாத்தானுடைய சூழ்ச்சியாகும். அவை தீண்டாதவருடைய பாதுகாப்புக்காக ஏற்பட்டதேயில்லை. ஏகாதிபத்தியத்தைத் தாங்கும் தூணாகவே ஏற்படுத்தப்பட்டது. சட்டத்தின் மூலமாக ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு பிரிவினையும் 'பிரித்து ஆளு' என்னும் பிரிட்டிஷ் கொள்கையை அனுசரித்ததேயாகும். ஏகாதிபத்தியத்தைக் காதுக்கு இனிமையான பேரைச் சொல்லி அழைத்தாலும் அதன் ஜீவநாடி பிரித்தாள்வதேயாகும்.

கேள்வி:—மாகாணச் சட்ட சபைகளுக்கு அபேட்சகராகக் காங்கிரஸ் நிறுத்தி வைத்த ஹரிஜனங்கள் பிரதமத் தேர்தலில் தாழ்ந்த ஸ்தானம் பெற்றதையும் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் நிறுத்திவைத்த ஹரிஜனங்கள் உயர்ந்த ஸ்தானம் பெற்றதையும் காங்கிரஸ் ஒப்புக்கொள்கிறதா இல்லையா? பிரதமத் தேர்தலில் தாழ்ந்த ஸ்தானம் பெற்ற ஹரிஜன அபேட்சகர்கள் கடைசித் தேர்தலில் வெற்றி பெற்றது ஜாதி ஹிந்துக்களுடைய ஓட்டுக்களால்தான் என்பதைக் காங்கிரஸ் ஒப்புக் கொள்கிறதா இல்லையா? இப்படி ஜாதி ஹிந்துக்களுடைய ஓட்டுக்களால் ஜெயித்த அபேட்சகர்களைத் தாழ்த்தப்பட்ட ஜாதியாருடைய உண்மையான பிரதிநிதிகளாகக் கருத முடியாது என்பதைக் காங்கிரஸ் மறுக்க முடியுமா?

பதில்:—இந்தக் கேள்வியில் சொல்லியுள்ள விஷயம் உண்மைதானா என்று அறிவதற்கு வேண்டிய புள்ளி விபரங்கள் என்னிடம் இல்லை. சில இடங்களில்தான் அப்படி நடந்தது. மற்ற இடங்களிலெல்லாம் அப்படி நடக்கவில்லை என்றே எண்ணுகிறேன்.

தோற்றுப் போன அபேட்சகரென்று யாரைக் குறிப்பிடுகிறார்? பிரதமத் தேர்தலில் தோற்றுப் போயிருந்தால் இறுதித் தேர்தலில் நிற்க முடியாதல்லவா? பிரதமத் தேர்தலில் முதல் 4 ஸ்தானங்களைப் பெற்றவர்கள் இறுதித் தேர்தலுக்கு நிற்கக்கூடிய யோக்கியதையுடையவர்கள்தானே. பிரதமத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களில் கடைசி ஸ்தானம் பெற்றவர் இறுதித் தேர்தலில் ஜாதி ஹிந்துக்களுடைய ஓட்டால் ஜெயித்திருந்தால் அது பெருமைப் படவேண்டிய விஷயம்தானே.

பிரதமத் தேர்தலில் முதல் ஸ்தானம் பெற்றவர் ஜாதி ஹிந்துக்களுடைய ஓட்டுக்களைப் பெற முடியாமல் தோற்றுப் போனாலும் அவரே தாழ்த்தப்பட்டவருடைய உண்மையான பிரதிநிதி என்று சொல்லுவதைக் காங்கிரஸ் மகாசபை மறுக்கவே வேண்டும். திரு. கெய்க்குவாடும் அவரைப் போன்றவர்களும் இந்துக்களாயிருக்கும்வரை ஜாதி ஹிந்துக்களுடைய ஓட்டுக்கள் என்று மற்ற இந்துக்களுடைய ஓட்டுக்களை அலட்சியம் செய்ய முடியுமா? அவர்கள் தாங்கள் உட்கார்ந்திருக்கும் கிளையை வெட்டலாகாது பிரிந்திருப்பதென்பது, வேறு மதத்தை ஏற்பதென்றோ அல்லது புது மதத்தை ஸ்தாபிப்பது என்றோ தான் அர்த்தமாகும். அப்படிச் செய்தால் இப்பொழுதுள்ள குழப்பத்தை இன்னும் அதிகக் குழப்பமாகச் செய்வதேயாகும்.

கேள்வி:—பூனா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் தாழ்த்தப்பட்ட ஜாதியார்க்கென்று தனியாக ஒதுக்கி வைக்கப்பட்ட ஸ்தானங்களுக்காகத் தேர்தல் நடத்துப் விஷயத்தில் ஜாதி இந்துக்கள் தலையிடமாட்டார்கள் என்று திரு. காந்தி வாக்குறுதி கொடுத்திருந்தார். ஏன் காங்கிரஸ் மகா சபை அந்த வாக்குறுதிக்கு விரோதமாக நடந்தது?

பதில்:—நான் அத்தகைய வாக்குறுதி எதுவும் கொடுக்கவில்லை. தாழ்த்தப்பட்டோரும் ஜாதி இந்துக்களும் சேர்ந்து ஓட்டுக் கொடுத்து ஹரிஜனப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றுதான் நான் அந்தக் காலத்தில் உண்ணாவிரதம் இருந்தேன். அப்படி ஜாதி இந்துக்கள் ஓட்டுச் செய்வதைத் தலையிடுவதாக எண்ணினால் தலையிடுவதுதான். அதற்கு வேறு அர்த்தம் கூறுவதானால் அதைக் கேள்வி கேட்பவர் விளக்கவும் வேண்டும், அதற்காதாரமாக என்னுடைய கட்டுரைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டவும் வேண்டும்.

கேள்வி:—1945-ல் வேவல் பிரபு ஸிம்லாவில் கூட்டிய மஹாநாட்டில் காங்கிரஸ் மஹா சபையானது நிர்வாக சபையில் தாழ்த்தப்பட்ட ஜாதியாருடைய பிரதிநிதிகள் இருவரைச் சேர்த்துக் கொள்வதற்கு யாதொரு ஆட்சேபணையும் கிளப்பவில்லை. ஏன் இந்தச் சமயம் காங்கிரஸ் மஹாசபை, தாழ்த்தப்பட்ட ஜாதியாருடைய பிரதிநிதிகளை இரண்டிலிருந்து ஒன்றாகக் குறைத்து விட்டது? இதிலிருந்து காங்கிரஸ் மகாசபையானது தான்சொன்ன சொற்படி நடக்கும் என்பதை நம்ப முடியாது என்றும், காங்கிரஸ் மஹா சபைக்கு முடிவு செய்யக்கூடிய உரிமை கிடைத்ததும் தான் சொன்ன வாக்குறுதிகளை மீறி தாழ்த்தப்பட்ட ஜாதியார் பெற்றிருந்த அரசியல் பாதுகாப்புக்களை எல்லாம் பறித்துவிடும் என்றும் விளங்கவில்லையா?

பதில்:—இந்தக் குற்றச் சாட்டு எனக்கு விளங்கவேயில்லை. நான் அறிந்தமட்டில் காங்கிரஸ் மஹாசபை நம்பிக்கைத் துரோகம் எதுவும் செய்யவில்லை.

கேள்வி:—தீண்டாமை விலக்கு முன்னேறவேயில்லை என்று ஹரிஜன சேவக சங்கத்தின் சகல ஊழியர்களும் மட்டுமின்றி திரு. காந்தியும்கூட ஒப்புக்கொண்டிருக்கிறார். தீண்டாமை விலக்கு முன்னேறுவதற்கு மாறாக ஆயிரக் கணக்கான வருஷங்களாக ஜாதி ஹிந்துக்கள் தீண்டாதவர்களுக்குச் செய்து வந்த துன்பங்களும் கொடுமைகளும் முன்னிலும் அதிகமாக அதிகரித்திருக்கின்றன. அநேக விதமான உருவங்களிலும் தோன்றியிருக்கின்றன. இதற்குப் பரிகாரம் ஏதேனும் கிடைக்க வேண்டுமானால் இந்தக் குறைகளைச் சட்ட சபைகளில் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமாகும். இப்படிக் குறைகளை எடுத்துச் சொல்லும் வேலை, தனித் தொகுதி மூலம் தெரிந் தெடுக்கப்படும் தாழ்த்தப் பட்டோர் பிரதிநிதிகளால் செய்ய முடியுமே அன்றி மற்றவர்களால் செய்ய முடியாது என்பதை அறிவுள்ளவர் எவரும் மறுக்க மாட்டார். அப்படியிருக்க ஏன் காங்கிரஸ் மட்டும் தாழ்த்தப் பட்டோர் தனித்தொகுதி வேண்டும் என்று கேட்பதை எதிர்க்க வேண்டும்?

பதில்:—தீண்டாமை விலக்கு முன்னேறவே இல்லை என்று நான் சொன்னதில்லை. ஹரிஜன சேவக சங்கம் சொன்னதாகவும் அறியேன். நாங்கள் ஒப்புக்கொண்டிருப்பதெல்லாம் தீண்டாமை விலக்கு ஜாதி இந்துக்களிடையே திருப்தி அளிக்குமளவு முன்னேறவில்லை என்பதே ஆகும். அது புதிதாகக் கூறும் ஒரு விஷயம் அன்று; வெகு நாளாகக் கூறுப்படுவதேயாகும். எந்தச் சீர்திருத்தத்தை மனத்தில் தீர்மானித்துக் கொள்ளுகிறாரோ அந்தச் சீர் திருத்தம் அடையும் முன்னேற்றத்தில் எளிதாகத் திருப்தி அடையும் சீர்திருத்த வாதி ஒன்றுக்கும் உதவமாட்டார். சீர்திருத்தம் இரண்டு அம்சங்களை உடையது. ஹரிஜனங்களிடையே செய்யும் வேலையில் சங்கமானது முன்னேற்றம் அடைந்தே வருகிறது. அது மட்டுமே கூடத் தீண்டாமை விலக்குக்கு அனுகூலமானதே. தீண்டப்படுவோரிடையே நடக்கும் வேலை நத்தை வேகத்திலேயே நடந்து வருகிறது. அது மலையில் ஏறுவது போன்ற கஷ்டமான வேலை. ஆயினும் மெதுவாக நடந்த போதிலும் உண்மையான முன்னேற்றம் அடைந்து வருவதாகவே கூறுவேன். ஜாதி ஹிந்துக்கள் செய்யும் துன்பங்களும் கொடுமைகளும் அதிகரித்திருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் தவறு. அதற்கு ஆதாரமே கிடையாது. ஆனால் உண்மை யாதெனில் சீர்திருத்தவாதிகள் அதிகமாக ஏற்பட்ட காரணத்தாலும் அவர்கள் அந்தக் கொடுமையைச் சீக்கிரமாக ஒழித்து விட வேண்டுமென்று ஆத்திரப் படுவதாலும் அதற்காக அதிகமான முயற்சிகள் செய்து வருவதாலும், சீக்கிரமாகத் தீண்டாமையை ஒழித்துக் கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சி ஹரிஜனங்களிடையே அதிகப்பட்டு வருகிறது என்பதேயாகும். இந்தமாதிரி அதிகப்பட்டு வருவது தீண்டாமை ஒழிவதற்கு அனுகூலமான காரியமேயாகும். ஆயினும் சீர்திருத்தவாதிகள் தங்கள் முயற்சியின் பலன்களைக் கண்டு திருப்தி அடைந்து விடலாகாது. இப்பொழுது அடைந்துள்ள முன்னேற்றத்தை விட இன்னும் அதிகமான முன்னேற்றம் அடைய வேண்டும். சீர்திருத்தம் முன்னேறுவதற்குச் சட்டமும் சட்ட சபையும் அவசியமே யாயினும் ஓரளவே உபயோகமானவை. அவைகளைக் கொண்டு மட்டுமே வேண்டிய அளவு முன்னேற்றத்தை அடைந்து விட முடியாது. இந்தக் கொடுமைக்குக் காரணமாயிருப்பது சட்டமன்று, வெகு காலமாக இருந்து வரும் வழக்கமேயாகும். இதை முந்தின இதழிலும் கூறியிருக்கிறேன். எந்தக் காலத்திலும் சட்டத்தை மாற்றுவதைவிட வழக்கத்தை மாற்றுவதே அதிகக் கஷ்டமான காரியம்.

நன்மை தீமைகளை அறிந்த பொது ஜனங்களின் அபிப்பிராயத்தின் மூலமாகவே தவறான வழக்கத்தை ஒழிக்க முடியும்.

தனித்து நிற்பது முன்னேற்றத்தை முற்றிலும் தடைப் படுத்தி விடும். தாழ்த்தப் பட்ட வகுப்பார் உட்பட சகல ஹிந்துக்களையும் ஒழித்து விடுவதே தனித்து நிற்பதின் லட்சியமாய் இருந்தாலன்றி தனித்து நிற்க வேண்டும் என்ற மயக்கத்தை விட்டு விட வேண்டும். தனித் தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் தாழ்த்தப்பட்டோருடைய நலன்களுக்கு விரோதமாகவே நடப்பார்கள். தாழ்ந்த வகுப்பாருடைய நலன்களில் அக்கரை இல்லாதவர்கள் எப்படித் தனித்து நிற்பதை எதிர்க்க முடியும்?

கேள்வி:—ஒரு சமூகத்தின் மதத்திற்கும் அந்தச் சமூகம் தனித் தொகுதி கேட்பதற்கும் சம்மந்தம் கிடையாது. ஒரே மதத்தைச் சேர்ந்த பல சமூகத்தாரும் தனித் தொகுதி வேண்டும் என்று கேட்கின்றனர். ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும் இந்தியக் கிறிஸ்தவரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள். அப்படி யிருந்தும் அவர்கள் எல்லோரும் தனித் தொகுதி பெற்றிருக்கிறார்கள். அப்படி அவர்கள் தனித் தொகுதி பெற்றதற்கு யாரும் காங்கிரசும் கூட எந்த விதமான ஆட்சேபனையும் கூறவில்லை. மற்றவர்கள் சம்மந்தப் பட்ட வரையில் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஆட்சேபத்தைக் கிளப்பாமல் தாழ்த்தப்பட்டோர் விஷயத்தில் மட்டும் ஒரே சமயத்தவர் என்ற ஆட்சேபத்தைக் கூறித் தனித் தொகுதிக் கோரிக்கையை ஏன் காங்கிரஸ் எதிர்க்க வேண்டும்?

பதில்:—தனித் தொகுதி யாருக்கானாலும் நல்லது தான் என்று எண்ணுகிறவர்களுடைய மனத்தில் தான் இந்தக் கேள்வி உண்டாகும். இந்த விதமாகக் காங்கிரஸ் எண்ணவில்லை. ஐரோப்பியர் ஆங்கிலோ இந்தியர் இந்தியக் கிறிஸ்தவர் ஆகியோருடைய விஷயத்தைக் கூறுவது பொருத்தமில்லை, கெடுதியுங்கூட. அந்த மாதிரித் தனித்து நிற்பது தனித்தொகுதியாலுண்டாகும் தீங்கிற்கும் ஏகாதிபத்திய வெறிக்கும் கவனிக்க முடியாதிருக்கக் கூடிய உதாரணமாகும். இதைவிட, அதிகமான ஆணவம் இருக்க முடியாது. ஐரோப்பியர்கள் அரசாளும் ஜாதியார் என்று தனியாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலோ இந்தியர்கள் இரு ஜாதியினராதலால் இந்தியக் கிறிஸ்தவர்களை விட்டுப் பிரித்து வைக்கப் பட்டிருக்கிறார்கள்.

கேள்வி:—சமூக விஷயங்களில் இந்துக்களும் சீக்கியர்களும் வேறு வேறாகப் பிரிந்து நிற்கவில்லை. ஒரே குடும்பத்தில் ஒருவர் ஹிந்துவாகவும் ஒருவர் சீக்கியராகவும் இருக்கிறார். ஹிந்துக்களும் சீக்கியர்களும் மணம் செய்து கொள்ளுகிறார்கள். ஒருவர் வீட்டில் ஒருவர் உண்ணவும் செய்கிறார்கள். அப்படி யிருந்தும் சீக்கியருக்குத் தனித் தொகுதி ஏற்பட்டிருக்கிறது. அதைக் குறித்து காங்கிரஸ் மகாசபை எந்தச் சமயத்திலும் எவ்விதமான ஆட்சேபனைகளும் சொல்லவில்லை. சீக்கியர்களும் முஸ்லீம்களும் சமூக விஷயங்களில் ஹிந்துக்களை விட்டு எவ்வளவு தூரம் பிரிந்திருக்கிறார்களோ அதற்கும் அதிகமாகத் தீண்டாதவர்கள் பிரிந்திருக்கிறார்கள். சீக்கியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் தனித் தொகுதி கொடுக்கலாமென்றால் தீண்டாதவர்களுக்கு ஏன் கொடுக்கக் கூடாது?

பதில்.—காங்கிரசுக்கு ஆயுத பலம் வேண்டாம், சொல்லித் திருத்தக் கூடிய பலம் மட்டும் இருந்தால் போதும். அந்த பலம் இருந்தால் காங்கிரஸ் மகாசபை இந்தத் தனித் தொகுதிகளை இன்றைக்கே ஒழித்து விடும். ஜாதி ஹிந்துக்களும் தீண்டாதவர்களும் கலந்து வாழ்வதைவிட அதிகமாக ஹிந்துக்களும் சீக்கியர்களும் கலந்து வாழுகிறார்கள் என்பது முற்றிலும் உண்மையே. அந்த நிலைமை ஜாதி ஹிந்துக்களுக்கும் ஹிந்து மதத்திற்கும் ஒரு கறையேயாகும். ஆனால் அதற்குரிய பரிகாரம் தீமையோடு தீமையைச் சேர்ப்பதன்று. தீண்டாதவர்கள் தனித்து நிற்க வேண்டும் என்று கேட்கும் கோரிக்கை தானாகவே மாண்டுமடியும்படி ஹிந்து மதத்தைத் திருத்துவதேயாகும். ஆனால் அதற்கிடையில் ஹரிஜனங்களை ஜாதி ஹிந்துக்களிடமிருந்து பிரித்து விடலாகாது. அத்தகைய தற்கொலையைச் செய்து கொள்ள ஹிந்துக்கள் சம்மதிக்க மாட்டார்கள்.

பாஞ்சகனி. மோ. க. காந்தி.

தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: பொ. திருகூட சுந்தரம்

ஆகஸ்ட் 4 ஞாயிறு 1946

ஆகஸ்ட்டு 9உ

ஏப்ரல் 6உ ஏப்ரல் 13உ ஜனவரி 26உ ஆகிய நாட்களைப் போலவே ஆகஸ்ட்டு 9உயும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஒரு புனிதமான தினமாகும், இந்த நாட்கள் உண்மை அகிம்சை என்னும் சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடித்து நாடெங்கும் ஹர்த்தால் செய்யவேண்டிய நாட்களாகும்,

ஆனல் இன்று சத்தியாக்கிரக முறையாகப் பார்க்கும் பொழுது, ஹர்த்தால் நடத்தக்கூடாத நிலைமையிலேயே இருக்கின்றோம். ஆகஸ்ட்டு 9உ யன்று அதைப் பற்றிக் கொஞ்சம்கூட சிந்திக்க கூடாத நிலைமையில் இருக்கின்றோம். இப்பொழுது நாம் பலாத்காரத்தைக் குறிப்பிட வேண்டுமென்று எண்ணினல் தான் ஹர்த்தால் செய்வது பொருத்தமா யிருக்கும்.

நாட்டில் செல்வாக்கு மிகுந்த இரண்டு தலைவர்கள் இது விஷயமாக அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். ஒருவர் காங்கிரஸ் மகாசபையின் தலைவரான பண்டித ஜவஹர்லால்நேரு. மற்றவர் சோஷியலிஸ்ட் கட்சியின் தலைவரான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன். தேசத்தினிடம் அளவற்ற பக்தி உடைய இந்த இருவரும் ஒருவர்க்கொருவர் முரணாக அபிப்பிராயம் தெரிவித்திருக்கும் பொழுது நான் அபிப்பிராயம் கூறுவது என்பது எனக்குத் தர்மசங்கடமாய் இருக்கிறது. ஆனல் சத்தியாக்கிரகி என்ற நிலைமையில் நான் அந்தத் தர்மசங்கடத்தை லட்சியம் செய்யாமல் அபிப்பிராயம்கூற வேண்டியவனே யாவேன்.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஒரு காங்கிரஸ்வாதி. பண்டித ஜவஹர்லால்நேரு அவருக்குக் காங்கிரஸ் காரியக்கமிட்டியில் ஒரு ஸ்தானம் அளிக்க விரும்பிய விஷயம் எல்லோருமறிந்த ரகசியமாகும். ஜெயப்பிரகாஷ் தம்முடைய அபிப்பிராயம் எதுவாயிருந்தபோதிலும், காங்கிரஸுக்கு விரோதமாக எந்தக்காரியமும் செய்யமாட்டார் என்ற நம்பிக்கையின் பேரிலேயே பண்டிதநேரு அந்த விதமாக ஸ்தானம் அளிக்க விரும்பினர். இப்பொழுது அவர் காங்கிரஸ் தலைவருடைய அபிப்பிராயம் தெரிந்த பிறகும் தம்முடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளாதிருப்பாரானல். அது காங்கிரஸுக்கு விரோதமான செயலாகவே தோன்றும். ஆதலால் அவர் இதற்குமுன்னதாகவே இந்தப் பிழையைத் திருத்திக் கொள்ளாதிருப்பாரானல் இப்பொழுதேனும் என்னுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு திருத்திக் கொள்வாரென்று நம்புகிறேன்.

சரியோ தப்போ காங்கிரஸ் காரியக்கமிட்டி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. அது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் அங்கீகரிக்கப்பட் டிருக்கிறது. அரசியல் நிர்ணய சபையின் வேலை சரியாக நடப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கி அந்தச் சபைக்குக் காங்கிரஸ்காரர்கள் போவதை ஆதரிப்பது காங்கிரஸ்காரர்கள் அனைவருடைய கடமையாகும். பிரிட்டிஷார் செய்யும் எந்தக்காரியத்திலும் நம்பிக்கை கொள்ளாதவர்களுக்கும்கூட இந்த யோசனையை நான் கூறுகின்றேன். அரசியல் நிர்ணய சபைக்குப் போவதால் எந்த அபாயங்கள் ஏற்படும் என்று அவர்களுக்குத் தோன்றுகிறதோ அந்த அபாயங்களைக் குறித்து அவர்கள் காங்கிரஸ்காரர்களுக்கு எச்சரிக்கை செய்யலாம். அதற்கான உரிமையை காங்கிரஸ் தலைவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் சமீபத்தில் நடந்தபோது அவர்களுக்கு அளித்தார். அவர்கள் அந்தக் கூட்டத்தில் தங்கள் எதிர்ப்பைக்கூறியதற்கு அதிகமாக எதுவும் செய்தால் அது தேசத்திற்குத் தீமை விளைவிப்பதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகஸ்ட் 9உ ஹர்த்தால் நடத்துவதை அத்தகைய தீயகாரியமாகவே நான் மதிக்கிறேன்.

காங்கிரஸ் மகாசபை கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்று இருக்கமுடியாது. அரசியல் நிர்ணய சபை மூலமாகச் சுதந்திரத்தை அடைவதற்கு வேண்டிய காரியங்களை யெல்லாம் செய்வதில் காங்கிரஸ் மகாசபைக்கு இடையூறு செய்யலாகாது, உதவியே செய்ய வேண்டும். சுதந்திரமடைவதற்காக யோக்கியமான முறையில் அரசியல் நிர்ணய சபையில் வேலை செய்வது வீணான காரியமாகாது. காங்கிரஸ் மகாசபை முட்டையிடுமுன்பே. பெட்டைக் கோழியைக் கொன்று விடலாகாது.

அத்துடன் நாட்டிலுள்ள சூழ்நிலையையும் கவனியுங்கள். ஆமதாபாத்திலும் வேறு இடங்களிலும் அறிவிழந்து செய்யும் குழப்பங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. டாக்டர் அம்பேத்கார் சத்தியாக்கிரகம் போல் தோன்றக்கூடிய ஒரு கேலிக் கூத்தை நடத்தி வருகிறார். உண்மையான சத்தியாக்கிரகம் என்றால் எதற்காக நடத்தப்படுகிறதோ அந்த லட்சியமும் அதை அடைவதற்காகக் கையாளப்படுகிற சாதனங்களும் நியாயமானவைகளாகவும், தெளிவானவைகளாகவும் இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இவர் நடத்தும் இயக்கத்தின் சாதனங்கள் அகிம்சையாக இருந்தாலும் கூட லட்சியமானது தெளிவாக இல்லை என்பதில் சந்தேகமில்லை. தபால்காரர்களுடைய வேலை நிறுத்தம் நியாயமானது என்று வைத்துக் கொண்டாலும்கூட அதற்கு அனுதாபம் காட்டுவதற்காக பம்பாயிலும் மற்ற இடங்களிலும் பரிபூர்ணமாக வேலைநிறுத்தம் செய்வதென்பது சரியா என்பதில் எனக்குச் சந்தேகமாகவே யிருக்கிறது. அநேகர் யோசனை செய்வது என்பதை அறவே விட்டுவிட்டது போலவே தோன்றுகிறது. எந்த விஷயத்தையும் ஆராய்வதற்கான சிரமத்தை மேற்கொள்ளாமலே ஏற்றுக்கொண்டு விடுவதாகத் தோன்றுகிறது. இந்த நிலைமையில் ஹர்த்தாலைச் செய்யச்சொல்வது குழப்பத்தைப் பாக்குவைத்து அழைப்பதேயாகும். எந்தவிதமான குழப்பமும் சுதந்திர வளர்ச்சிக்கு ஏற்றதாகாது. எந்த விதமாகப் பார்த்தாலும் ஆகஸ்ட்டு 9உ இந்தியாவில் ஹர்த்தால் செய்யக்கூடா தென்றே தோன்றுகிறது. அதனல் அன்று ஜனங்கள் ஹர்த்தால் செய்யாமல் காங்கிரஸ் மகாசபையின் தலைவர் கூறியுள்ளபடி அந்த நாளை அமைதியாகவும் கௌரவமாகவும் ஒழுங்காகவும் கொண்டாடுவார்வார்களென்று நம்புகிறேன்.

பாஞ்சுகனி — 27-7-46 — மோ. க. காந்தி

ஒரு சோகம் நிறைந்த சம்பவம்

அரசியல் நிர்ணய சபையில் தங்கட்கு ஸ்தானம் வேண்டும் என்று விரும்புகிறவர்களுடைய கடிதங்கள் என்னிடம் வந்து குவிவதைப் பார்த்தால் நம்முடைய நாட்டிலுள்ள கல்விகற்ற மக்கள் இந்தியாவின் சுதந்திரத்தை விடத் தங்கள் சுயநலனையே பெரிதாக மதிக்கிறார்களோ என்ற சந்தேகமானது உண்டாகின்றது. அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் எவ்வித சம்பந்தமுமில்லாத எனக்கே இத்தனை கடிதங்கள் வரவேண்டுமானல் காங்கிரஸ் காரியக் கமிட்டியார்க்கு எத்தனை வந்துகொண் டிருக்கவேண்டும்? நான் இந்தத் தேர்தல்களில் அக்கரை கொள்வதில்லை என்பதையும் இந்த அபேட்சை மனுக்களை

ஆராயும் காரியக் கமிட்டிக் கூட்டங்களுக்கு நான் செல்லுவதில்லை என்பதையும் தேர்தல் செய்யப் பெற்றவர் யார் என்பதைப் பத்திரிகைகளிலிருந்தே நான் அறிந்துகொள்ளுகிறேன் என்பதையும் இந்த நிருபர்கள் அறிந்துகொள்ள வேண்டும். தேர்தல் சம்பந்தமாக வெகு அபூர்வமாகவே என்னிடம் யோசனை கேட்கப் படுகின்றது.

ஆனால் நான் இதை எழுதுவதற்குக் காரணம் நான் தலையிட்டு அவர்கட்கு ஸ்தானம் கிடைக்கச் செய்ய முடியாது என்று நிருபர்களுக்கு எச்சரிக்கை செய்வதைவிட இந்த அபேட்சைகள் நாட்டில் ஏற்பட்டுள்ள எந்த நோயைக் காட்டுகிறதோ அதைச் சுட்டிக் காட்டுவதேயாகும். இத்தகைய தேர்தல்களில் வகுப்புவாதத்தை நுழைப்பது தவறு. அரசியல் நிர்ணய சபைக்கு யாரானாலும் தகுதியுடையவர்தான் என்று எண்ணுவது முற்றிலும் தவறு. இறுதியாக, அரசியல் சபை நடக்கும்பொழுது ஆஜராவதால் பணம் சம்பாதிக்கலாம் என்று எண்ணுவதும் தவறு. பொதுவாக உலகத்தில் நடைபெறும் அரசியல் முறைகளையும் சிறப்பாக இந்தியாவுக்கு உகந்த அரசியல் முறையையும் நன்றாக அறிந்தவர்கள் மட்டுமே அரசியல் நிர்ணய சபையில் அங்கத்தினராக இருக்கவேண்டும். அந்தச் சபையில் அங்கம்வகிப்பது கௌரவம் என்று எண்ணுவது இழிவாகும். உண்மையான சேவை செய்யவேண்டிய இடம் அந்தச் சபையன்று. அதற்கு வெளியே யாகும். வெளியே செய்யும் சேவைக்கு எல்லை கிடையாது. இப்பொழுது அமைக்கப் பெற்றுவரும் அரசியல் நிர்ணய சபையும் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு அம்சமே யாகும். ஆனால் அந்த அம்சம்கூட மிக அற்பமானதே. அந்த அற்பமான அம்சமும் அறிவோடு நன்கு உபயோகித்தால்தான் பலன் தரும். அதில் ஸ்தானம்பெற இப்படி அடித்து விழுந்துகொண்டிருந்தால் அது நிச்சயமாக எவ்வித பலனும் தராது. இப்படி அடித்து விழுந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் அது பதவி வேட்டைக்காருடைய வேட்டை ஸ்தலமாக ஆகிவிட்டதோ என்று அஞ்சவேண்டியதா யிருக்கிறது.

சட்டசபை வேலையின் பயனாகவே அரசியல் நிர்ணய சபை வந்திருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்கிறேன். சட்டசபை வேலையும் சுதந்திர இயக்கத்தில் ஒரு அம்சமாகும் என்பதைக் காணுமாறு தேசபந்து சித்தரஞ்சன் தாஸும் பண்டித மோதிலால் நேருவுமே என்னுடைய கண்களைத் திறந்துவைத்தார்கள். நான் அது கூடாது என்று எவ்வளவோ பாடுபட்டேன். அது உண்மையிலே ஒத்துழையாமைக்கு முற்றிலும் முரண்பட்டதே யாகும். ஆனால் எவ்விதக் கலப்புமில்லாத ஒத்துழையாமை ஒருபொழுதும் அனுஷ்டிக்கப்பட்டதில்லை. அத்துடன் அனுஷ்டிக்கப்பட்ட ஒத்துழையாமையும் குறைந்துகொண்டு வந்தது. காங்கிரஸ்காரர்கள் சகல பாகங்களிலும் அஹிம்சையோடு கூடிய ஒத்துழையாமையைப் பரிபூரணமாக அனுஷ்டித்திருந்தால் சட்ட சபை வேலை ஏற்பட்டிருக்கமாட்டாது. அஹிம்சையோடு கூடிய ஒத்துழையாமை என்பதற்கு நன்மையாக வுள்ளவற்றோடெல்லாம் ஒத்துழைப்பு என்பதே பொருள். ஆதலால் அஹிம்சையோடு கூடிய ஒத்துழையாமையை அன்னிய அரசாங்கத்திடம் அனுஷ்டிப்பது என்பதற்கு அஹிம்சையோடு கூடிய சுதேச சர்க்காரை அமைப்பது என்பதே அர்த்தமாகும். அத்தகைய ஒத்துழையாமை பரிபூரணமாக நடந்திருந்தால் இன்று அஹிம்சா பூர்வமான சுயராஜ்யம் ஸ்தாபிதமா யிருக்கும். ஆனால் அத்தகைய ஒத்துழையாமை நடைபெற வில்லை. அந்த நிலைமையில் ஜனங்கள் வெகுநாளாகப் பழகியிருந்ததும் பூரணமாகக் கைவிட முடியாதபடி யிருந்ததுமான ஒரு வழக்கத்தை எதிர்த்துப் போராடுவது வீணேயாகும்.

இந்த மாதிரியாகச் சட்டசபை வேலையை மேற்கொண்டு விட்டதால் இப்பொழுது அதை வேண்டாம் என்று கூறுவது சரியாகாது. ஆனால் அதைக் கொண்டு அரசியல் நிர்ணய சபையில் ஸ்தானம் பெறுவதற்கு இவ்விதம் இழிவான போட்டி யிருக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. அதுவன்று அதன் அர்த்தம் அதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பாஞ்சகனி. மோ. க. காந்தி

கேள்வியும் பதிலும்

கேள்வி :—எனக்கு 21 வயது ஆயிற்று. நான் வியாபாரம் செய்கிறேன். நான் பதினொருபேரைக் காப்பாற்ற வேண்டியவனா யிருக்கிறேன். நான் உண்மையிலும் அஹிம்சையிலும் நம்பிக்கை உடையேன். ஆனால் நான் அவற்றை வியாபாரத் துறையில் பரிபூரணமாக அனுஷ்டிக்க முடியவில்லை. இந்த நிலைமையில் நான் செய்யவேண்டியது யாது? நான் வியாபாரத்தை விட்டுவிட்டால் என்னைச் சார்ந்து நிற்பவர்க்கெல்லாம் கஷ்டம் உண்டாய்விடும்.

பதில் :— இவர் எதை முடியாது என்று கூறுகிறாரோ அதை முடியும் என்று எண்ணுவதாகவே தோன்றுகிறது. வியாபாரத்தை முற்றிலும் யோக்கியமாக நடத்துவதென்பது கஷ்டமான காரியந்தான். ஆனால் முடியாத காரியம் அன்று. உண்மை யாதெனில் எவ்வளவுக் கெவ்வளவு வியாபாரத்தை யோக்யமாக நடத்துகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அதில் அதிகமான வெற்றியைக் காண்கிறோம் என்பதே யாகும். அதன் காரணமாகத்தான் ' நாணயம்தான் தலைசிறந்த வெற்றிமார்க்கம் ' என்று வியாபாரிகள் சிருஷ்டித்த பழமொழி உண்டாயிருக்கிறது. இந்த நிருபரிடமுள்ள குறை விடாமுயற்சியின்மையும் யோக்யமாக வியாபாரத்தை நடத்தும் முறை நன்றாகத் தெரியாததுமே யாகும். நாணயத்துக்கும் பெரும்பொருள் சேர்ப்பதற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. "ஊசித் துவாரத்தின் வழியாக ஒட்டகம் நுழைந்தாலும் நுழையலாம், கடவுள் ராஜ்யத்துக்குள் பணக்காரர் ஒருநாளும் நுழைய முடியாது." அத்துடன், நாணயமாக வியாபாரம் செய்ய விரும்புகிறவர் எவ்வளவு திறமை யுடையவராக இருந்தாலும் கூடின தொகையினரானாலும் சரி குறைந்த தொகையினரானாலும் சரி சோம்பேரிகள் யாரையும் காப்பாற்றக் கூடாது. இந்த நிருபர் காப்பாற்றிவரும் 11 பேரும் குழந்தைகளாகவோ வேலைசெய்ய முடியாதவர்களாகவோ இருக்க முடியாது. வியாபாரிகள் நாணயமாக நடந்துகொள்வதில் எவ்விதக் கஷ்டமும் கிடையாது. நாணயமாக நடப்பவர்க்கு நாணயமாக நடவாத பந்துக்கள் இருக்கக்கூடாது. இந்த நிருபர் தம்மையே ஆராய்ந்து பார்ப்பாரானால் நாணயமாக வியாபாரத்தை நடத்துவதில் கஷ்டமொன்றும் கிடையாது என்பதையும் தம்மிடத்திலேயே ஏதோ ஒரு குறையிருக்கிறது என்பதையும் கண்டுகொள்வார். அந்தக் குறை எதுவென்று கண்டுகொண்டால் அவருக்கு அது நல்லதாகும்.

கேள்வி :—இறக்கும் நேரம் இடம் முறை இவற்றை எல்லாம்வல்ல இறைவன் எல்லோருக்கும் தனித் தனியாக ஏற்படுத்தி யிருக்கிறானா? அப்படி ஏற்படுத்தி யிருந்தால் நாம் நோயா யிருக்கும்பொழுது கூட ஏன் கவலைப்படவேண்டும்?

பதில் :—இறக்கவேண்டிய நேரம் இடம் முறை முன்கூட்டியே ஏற்படுத்தப்பட் டிருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதே இதையும் கூடத் தெளிவாக அறியேன். இன்று தெளிவாக இல்லாவிட்டாலும் பிரார்த்தனை செய்து எதிர்

பார்த்து நின்றால் நாளைக்கேனும் அதற்கு மறுநாளேனும் தெளிவாகிவிடும். ஆயினும் ஒரு விஷயத்தைத் தெளிவாக மனதில் ஆக்கிக்கொள்ளவேண்டும். சர்வ வல்லமையுள்ள இறைவன் நம்மைப்போன்ற ஒரு ஆள் அல்லன். அவனை உலகத்தில் காணப்படும் தலை சிறந்த ஜீவசக்தி என்றோ தர்ம மென்றோதான் சொல்லவேண்டும். ஆதலால் அவன் நினைத்ததை நினைத்தபடி செய்யமாட்டான். அவனுடைய சட்டத்தைத் திருத்த முடியாது. அவனுடைய எண்ணத்தை மாற்ற முடியாது. மற்றவைகள்தான் நிமிஷந்தோறும் மாறிக் கொண்டிருக்கும். இறைவன் விதித்தபடி நடக்கும் என்பதைத் கொண்டு நாம் நோயா யிருந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை என்று சொல்ல முடியாது. நோயார்வதை விட நோயை அலக்ஷியம் செய்வது பெரிய குற்றமாகும். நாளுக்கு நாள் முயற்சி செய்து முன்னேறுவதற்கு முடிவு கிடையாது. நாம் என் நோயானோம் என்று கவலைப்படுவதும் காரணத்தைக் கண்டு பிடிப்பதும் அவசியமாகும். ஆரோக்கியம்தான் இயற்கைச் சட்டமே யன்றி ஆரோக்கியமின்மை யன்று. நாம் நோயாகாம லிருக்கவும் நோயாய் விட்டால் குணமடையவும் விரும்பினால் இயற்கைச் சட்டத்தை அறிந்து அதன்படி நடப்பது கடனாகும்.

பாஞ்சகனி மோ. க. காந்தி

புரட்சிகரமான கைராட்டினம்

திரு. திரேந்திரநாத் மஜும்தார் புரட்சிகரமான கைராட்டினம் என்ற பெயர் வைத்து இந்துஸ்தானியில் ஒரு சிறு புஸ்தகம் எழுதி யிருக்கிறார்.

அதில் 40 பக்கங்களே இருந்தபோதிலும் புதுத் திட்டத்தைப் பற்றிய சகல விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. புதுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தினால் எப்படி உண்மையான சுயராஜ்யமும் உண்மையான புரட்சியும் உண்டாகி விடும் என்பதை அந்தச் சிறு நூல் கூறுகிறது. புதுத் திட்டத்தை மனப் பூர்வமாக ஏற்று நடத்தினாலன்றி புரட்சி என்பது வெறும் பேச்சளவி லிருக்குமே அன்றி உண்மையில் நடந்து விட மாட்டாது. அதனால் எப்படி அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை ஜனங்களுக்குக் காட்ட வேண்டியது மிகவும் முக்கியமாகும். இன்று நகரங்களிலுள்ள ஜனங்கள் எவ்வளவு அதிகமான பணம் கொடுத்தாலும் தங்களுக்குக் கதர் வாங்க முடியவில்லையே என்று அதிகமாக வருத்தப்படுகிறார்கள். இந்த மாதிரிக் கஷ்டம் முன்னாலும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் காலங்களில் சீக்கிரமாய் கதர் கிடைக்கும் என்று நான் அவர்களுக்குத் தைர்யம் சொல்லி வந்தேன். அந்தக் காலங்களில் விலையைச் சரிப்படுத்தி விட்டால் போதும், கதர் கிடைக்கக் கூடியதா யிருந்தது. ஆனால் இன்று பணத்தைக் கொண்டு உண்மையான புரட்சியை நடத்த முடியாது. வாழ் நாள் முழுதும் அனுஷ்டித்த பழக்கத்தை மாற்றுவதும் சோம்பலைத் துறப்பதும் அழிப்பதை விட்டு ஆக்குவதும் கஷ்டமான காரியம். ரயில் வண்டிக்குள் புகுந்து பதினைபிர ரூபாயைச் கொள்ளை யடிப்பது சுலபம். ஆனால் அந்தத் தொகையை வேர்வை வர வேலை செய்து சம்பாதிப்பது கஷ்டம். பங்கு மார்க்கட்டில் ஒரே நாளில் லட்ச ரூபாய் தேடி விடுவது சர்வ சாதாரணமான காரியம். ஆனால் அந்தத் தொகையை ஒரே நாளில் வேலை செய்து தேடியவரை யாரேனும் கேட்டதுண்டா? லாட்டரி மூலம் தனவந்தரான பிச்சைக்காரர்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம், ஆனால் இமை கொட்டும் நேரத்தில் கையால் வேலை செய்து பணத்தைக் குவித்து விட்ட தரித்திரரைப் பற்றி கேள்விப் பட்டதில்லை.

இரண்டணாவோ எட்டணாவோ வேலைக்குத் தகுந்த கூலி மட்டுமே கிடைக்கும் 20 கோடி மக்களும் வேலை செய்து கதரை உற்பத்தி செய்வது வேறு; மில் துணியை உண்டாக்குவது வேறு. உண்மையான சுயராஜ்யமானது ஒரு சில ஆயிரம் பேர் வேலை செய்யும் மெஷின்களால் உண்டாய்விட மாட்டாது. ஆனால் 20 கோடி மக்கள் தங்களுடைய உபயோகத்திற்காகவும் மீதியை விற்பதற்காகவும் விஷயமறிந்து வேலை செய்து கதரை உற்பத்தி செய்வார்களானால் அவர்கள் இந்தியாவின் நிலைமையை அடியோடு மாற்றி விட முடியும். நாட்டிலுள்ள நாற்பது கோடி மக்களில் 20 கோடிப் பேர் தங்களுக்கு வேண்டிய கதரை உற்பத்தி செய்ய முற்பட மாட்டார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். அதை நான் ஒரு நாளும் ஏற்றுக் கொள்ள முடியாது.

பாஞ்சகனி, மோ. க. காந்தி.

துணிப் பஞ்சம்

கதரிலும் இதர கிராமக் கைத்தொழில்களிலும் அக்கறை கொண்டுள்ள திரு மனு சுபதார் சில காலத்துக்கு முன் கீழ்க் கண்ட குறிப்பு ஒன்றை எனக்கு அனுப்பியிருந்தார். ஆனால் நான் அதை ஹரிஜனில் பிரசுரிப்பதை விட வேறு நல்ல விதமாக எப்படி உபயோகிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபடியால் இது வரைப் பிரசுரியாமலிருந்தேன். ஆனால் வேறு யோசனை எதுவும் எனக்குத் தட்டுப்படவில்லை. ஆதலால் மாகாண சர்க்கார்களும் இதர ஸ்தாபனங்களும் தனி மனிதர்களும் உபயோகித்துக்கொள்ளும் பொருட்டு அதை இப்பொழுது பிரசுரிக்கிறேன்.

இது தான் திரு. சுபதாருடைய திட்டம் :—

“ஒவ்வொரு கிராமத்துக்கும் மொத்தமாக ஒரு பேல் பஞ்சு கொடுக்க வேண்டும். கிராமத்து ஜனங்கள் இந்தப் பஞ்சு முழுவதையும் நூற்று விட முடியும், இந்த நூலை இரண்டாகத் திரிக்கலாம், ஊடைக்குப் போடலாம், துணி நெய்யலாம்.

ஒரு பேல் பஞ்சைக் கொண்டு சுமார் 1800 கெஜம் முதல் 2400 கெஜம் வரை துணி நெய்யலாம். கைராட்டினங்களும் தக்ளிகளும் தேவையானால் சர்க்காரே கொடுக்க வேண்டும். அவைகளைச் சிறைச் சாலைகளில் உற்பத்தி செய்யலாம்.

துணி தயாரானவுடன் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு துணி வேண்டுமென்று தீர்மானித்து பங்கீட்டு முறையில் கிராமத்து ஜனங்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

கிராமத்திலுள்ள விவசாயிகளிடம் அவர்களுடைய தேவைக்கு அதிகமாக உள்ள தானியம் இருப்பதாகத் தெரிந்தால் அந்த தானியத்தை வசூலிப்பது அவசியம் என்று தோன்றினால் தானியத்துக்குப் பதிலாகத் துணியே கொடுக்க வேண்டும். இப்படி தானியம் அதிக மில்லாத கிராமங்களில் ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய பருத்தியை வாங்கிக்கொள்வதற்கு வேண்டிய பணத்தை வசூலிக்க வேண்டும். இப்படி வசூலிக்கும் பணத்தைக் கொடுத்து சர்க்காரிடம் வாங்கும் பருத்தியை நூற்பதின் மூலம் தங்களுக்கு வேண்டிய துணியை அடைந்து விடுவார்கள்.

இந்த விதமாகச் செய்தால் துணிப்பஞ்சம் குறையும். பருத்தி விலையாகாமல் விவசாயிகளிடம் தேங்குவதும் குறைந்து விடும். பருத்தி பயிரிடுவோர்க்கும் உதவியாக இருக்கும்.

கிராமப் பஞ்சாயத்தாரே சர்க்கார் கொடுக்கும் பருத்தியை வாங்கிக் கொண்டு இந்த வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதால் கீழ்க் கண்ட காரியங்களைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

1. கிராமக் கைத்தொழில்

2. ஒன்று சேர்ந்து செய்யும் வேலை

3. சிறியோர் பெரியோர் எல்லோரும் வேலை செய்தல்

4. தரகர்கள் இல்லாதபடி செய்தல்.

பம்பாய் மாகாணத்திலுள்ள கிராமங்களில் 2000 கிராமங்களிலாவது இந்தத் திட்டத்தை நடத்திப் பார்த்தால் 6 வார காலத்திற்குள் நல்ல பலனைக் கண்டு விடலாம்.

சர்க்கார், பேலுக்கு 225 ரூபாய் வீதம் பருத்திக்காகப் பணம் ஒதுக்கி வைக்க வேண்டும். இந்தப் பணத்தில் பெரும் பாகம் பணமாகவோ தானியமாகவோ திரும்பி வந்துவிடும். இந்தமாதிரிச் செய்தால் கிராமத்து ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்வதற்கு அடிகோலியதாகும்.

கைத்தறிகள் இல்லாத இடங்களிலும், உற்பத்தியாகும் நூல் நெசவுக்கோ பாவுக்கோ உபயோகிக்க முடியாதிருக்கும் இடங்களிலும் சர்க்கார் உதவி தேவையாகும். இந்தக் காரியங்களை மேற்பார்ப்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவின் தலைநகரிலும் ஒரு அதிகாரியை நியமிக்கலாம்.

சர்க்கார் கொடுக்கும் பருத்திக்குரிய பணத்தைக் கிராமத்தார் கொடுத்தவுடன் மறுபடியும் சர்க்கார் அட்வான்ஸாகப் பருத்தியை அனுப்பிவைக்கலாம்.

இந்தத் திட்டம் நான் சொன்ன திட்டம்போல் உள்ளதுதான். என்னுடைய திட்டமே இதைவிட நல்லது என்று எண்ணுகிறேன். ஆயினும் திரு. சுபதார் புள்ளிவிபரங்களைச் சேகரித்திருப்பதாலும், ஒரு பேல் பஞ்சைக் கொடுத்து ஆரம்பிக்கலாம் என்று கூறுவதாலும், அவர் பொருளாதார நிபுணர் என்ற நிலைமையில் என் தகவல் இல்லாமல் தாமே இந்தத் திட்டத்தை வகுத்திருப்பதாலும் நான் அவருடைய திட்டதுக்கு அதிகமான மதிப்பைக் கொடுக்கின்றேன். மனிதன் வகுக்கும் எந்த திட்டத்திலும் குறைகள் காண்பது எளிது. நாம் செய்யவேண்டிய வேலை குறைகளை நீக்கத் தெரிந்தால் நீக்குவதும், குறைகளைத் திருத்த முடியாதென்று கண்டாலும் திட்டத்தை ஆரம்பித்து நடத்திப் பார்ப்பதும் தான். குற்றம் குறைகள் இல்லாத திட்டத்தை வகுத்தபிறகுதான் வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று காத்திருந்தால் எந்தச் சீர்திருத்தமும் நடைபெறப் போவதில்லை.

பாஞ்சகனி, — 25-7-46 — மோ. க. காந்தி

உம்மையே குணப்படுத்திக்கொள்ளும்

ஆமதாபாத்தில் நடந்துகொண்டிருக்கும் கொலை பாதகங்களைக் குறித்து ஒரு நிருபர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். நான் அவருடைய கடிதத்திலிருந்து அது சம்பந்தமான பகுதிகளைக் கீழே தருகின்றேன். "கலகங்களை அடக்குவதற்காகக் கையாள வேண்டிய முறைகளைக் குறித்துத் தங்களுக்கு எழுத விரும்புகிறேன். இரண்டு மாதங்களுக்கு முன் அஹிம்சா சேவாதளம் அதாவது அஹிம்சையாக நடக்கும் தொண்டர் படை என்பதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தீர்கள். ஆனால் நாட்டிலுள்ள நிலைமையைப் பார்க்கும்பொழுது அந்த யோசனை சரிப்படாது என்று தோன்றுகிறது. பிரிட்டிஷ் சர்க்காரை எப்படி அஹிம்சா முறையில் எதிர்ப்பது என்று தாங்கள் எங்களுக்குக் காட்டியது போலவே தாங்கள் இப்பொழுது கலகம் நடக்குமிடத்திற்குச் சென்று அஹிம்சா முறையில் கலகங்களை எப்படி அடக்குவது என்பதை நேரில் நடத்திக் காட்டவேண்டும். தாங்கள் இன்று கலகங்களை அடக்குவதற்காக ஆமதாபாத்திற்குப் போயிருந்தால் எத்தனையோ தொண்டர்கள் உங்களுடன் பணி செய்ய வந்திருப்பார்கள். எங்கள் காங்கிரஸ் ஊழியர்களில் இருவர் திரு. வசந்த ராவும், திரு. ராஜாபலியும் கலகத்தை அடக்குவதற்காகச் சென்று போக்கிரிகளுடைய கத்திக்கிரையாகி விட்டார்கள். அவர்கள் ஒரு லட்சியத்திற்காக உயிரைத் துறந்ததால் சகலவித மான புகழ் உரைகளுக்குத் தகுதிவாய்ந்தவர்கள் ஆகி விட்டார்கள். ஆனால் வேறு யாருக்கும் அவர்களைப் பின்பற்றி நடப்பதற்கு வேண்டிய மனோ தைரியம் உண்டாகவில்லை.

அந்த இருவருக்கும் தங்கள் பலத்தில் நம்பிக்கை இருந்தது போல மற்றவர்களுக்கு இருக்கவில்லை. இருந்திருந்தால் இந்தக் கலகங்கள் ஏற்பட்டிருக்க மாட்டா. ஏற்பட்டிருந்தாலும் இப்பொழுது காணப்படும் அளவிலும் உருவத்திலும் ஏற்பட்டிருக்க மாட்டா. ஆனால் இதெல்லாம் இன்று காரிய சாத்தியமாகாத கற்பனை விஷயமேயாகும்.

தாங்கள் நேரில் வந்து வழி காட்டினால் அது என்னைப்போன்ற பலருக்கும் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் ஊட்டும். நீங்கள் ஒருதரம் நடத்திக் காட்டிவிட்டால் பிறகு சந்தர்ப்பம் ஏற்படும்பொழுதெல்லாம் ஸ்தலத்திலுள்ள ஊழியர்கள் அதைப் பின்பற்றி நடக்கக் கூடிய சக்தி உடையவர்களாக இருப்பார்கள். அந்தவிதமாகத் தாங்கள் நேரில் நடத்திக் காட்டாவிட்டால் அஹிம்சா முறையில் பாதுகாவல் ஏற்படுத்திக்கொள்ளும் விஷயத்தில் தங்கள் கட்டுரைகளும் பிரசங்கங்களும் சாதாரண ஜனங்களுக்கு மட்டுமின்றிக் காங்கிரஸ்காரர்களுக்குங் கூட எவ்வித பயனும் தரமாட்டா"

மேலே கண்ட யோசனையை நான் வரவேற்கின்றேன். ஜனங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எந்த விதத்திலேனும் ஒழிக்க வேண்டுமென்று விரும்பியதினாலேயே என்னுடைய புத்திமதியை ஏற்று அஹிம்சா எதிர்ப்பு முறையை மேற்கொண்டார்கள். ஆனால் அவர்கள் வேறு எதுவும் செய்ய முடியவில்லையே என்று எண்ணிய காரணத்தினால் தான் அஹிம்சா முறையை ஏற்றுக் கொண்டார்கள் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆதலால் அவர்களுடைய அஹிம்சை பலவீனவர்களுடைய ஆயுதமாகவேயிருந்தது. அதனால்தான் நாம் இன்று நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸையும் அவருடைய சுதந்திர இந்தியச் சேனையையும் போற்றுகின்றோம். அந்தச்சேனைவீரர்கள் இந்தியாவுக்குச்சென்றவுடன் அஹிம்சையையே அனுஷ்டிக்க வேண்டுமென்று நேத்தாஜியே சொல்லியிருக்கிறார் என்பதையும் மறந்து விடுகிறோம். இந்த மாதிரி அவர் சொல்லியிருப்பதை இந்திய தேசிய ராணுவத்தின் அதிகாரிகளிடமிருந்தே அறிந்து கொண்டேன். நாம் நமக்குள்ள பகுத்தறிவையெல்லாம் இழந்து விட்டோம். அந்த அறிவைப் பெற வேண்டுமானால் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் நேத்தாஜி கூறிய உபதேசப்படியே நடக்க வேண்டும். அஹிம்சையில் நம்பிக்கை உடையவர்கள் ஹிம்சை நிறைந்த இந்தச் சூழ்நிலையில் வேலை செய்வது மிகவும் கஷ்டமான காரியமாகும். ஆனால் ஹிம்சையை அனுஷ்டிப்பதற்கு வேண்டிய மனோ தைரியத்தை விட அதிகமான மனோ தைரியம் உண்மையான அஹிம்சையை அனுஷ்டிப்பதற்குத் தேவையாகும். நாம் இன்னும் அத்தகைய அஹிம்சையை அனுஷ்டித்துக் காட்ட முடியாதவர்களாய் இருந்து வருகிறோம். திரு. சங்கர் வித்யார்த்தியும், திரு. வசந்தராவும், திரு. ராஜாபலியும் செய்த காரியங்களை வீரர்களுடைய அஹிம்சை அனுஷ்டானத்திற்கு அடையாளமாகக்

காட்டலாம். ஆனால் வகுப்புவாத உணர்ச்சிகள் அளவு கடந்து பொங்கி எழும்பொழுது அத்தகைய தியாகங்களின் பலனை திர்சனமாகக்காட்ட முடியாமற் போகிறது. அதைக் காட்ட வேண்டுமானால் திரு. கணேஷ் சங்கர் வித்யார்த்தியைப் போல இன்னும் பலரும், பிராணத் தியாகம் செய்ய வேண்டியது அவசியமாகும். ஆமதாபாத்தில் வேறுயாரும் திரு. வசந்தராவையும், திரு, ராஜாபலியையும் பின்பற்றி நடக்க வில்லை என்பது அகிம்சையாக நடக்கும் விஷயத்தில் உயிர் துறக்கும் அளவு தியாகம் செய்வதற்கான மனோதைரியத்தை நாம் இன்னும் நம்மிடம் வளர்த்துக் கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. இந்த நிலைமையில் மற்றவர்கள் என்னுடன் சேர்ந்து கொண்டாலும் சேர்ந்து கொள்ளா விட்டாலும் நான் போய்க் காரியங்களை நடத்த வேண்டும் என்று இந்த நிருபர் கூறுவது முற்றிலும் சரியே. நான் வீட்டிலிருந்துகொண்டு மற்றவர்களைப் போய் பிராணத் தியாகம் செய்யச் சொல்வது எனக்கு மிக்க இழிவேயாகும். அந்தமாதிரி நடப்பது அகிம்சையாகாது. வகுப்பு வாதக் கலகங்கள் நடக்கும் சமயத்தில் என்னுடைய அகிம்சைக் கொள்கையைக் கையாண்டு பார்ப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பம் எனக்கு ஒரு பொழுதும் கிடைத்ததில்லை. என்னுடைய கோழைத் தனத்தினால்தான் நான் அவ்விதமான சந்தர்ப்பங்களைத் தேடிக்கொள்ளவில்லை என்று கூறக்கூடும். அது எப்படி இருந்தபோதிலும் சரி கடவுளுக்குச் சித்தமானால் காலம் கடந்துவிடவில்லை. எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவே செய்யும். கடவுள் என்னை அந்தத் தீயில் இட்டு என்னைப் புனிதமாக்கவும் அகிம்சா மார்க்கத்தை தெளிவுடையதாக ஆக்கவும் செய்யவே செய்வார். இதைக் கொண்டு என்னுடைய உயிரைத் தியாகம் செய்துவிட்டால் எல்லா இம்சையும் நின்று போகும் என்று யாரும் எண்ணிவிடலாகாது. எங்கும் பரவியுள்ளபயங்கரமான இம்சைஒழிந்து, அஹிம்சை அரசாக்ஷி செய்யவேண்டுமானால் என்னைப்போல் எத்தனையோபேர் பிராணத்தியாகம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

"உண்மைமார்க்கம் வீ ர னு க் கே, கோழைக்கு அன்று" என்று கவிஞர் பாடுகின்றார்.

உண்மை மார்க்கம்தான் அகிம்சா மார்க்கம்.

பாஞ்சகனி — 26-7-46 — மோ. க. காந்தி

[ஹரிஜன சேவக்கிலிருந்து]

கதர் ஊழியர்கள்

கதர் ஊழியர்களைப்பற்றி என்னிடம் இரண்டு கேள்விகள் வந்துள்ளன. அவற்றுள் ஒன்று கிராம ஊழியர்களைப் பற்றியதாகும். நூல் நூற்பதும் பிறரை நூற்கும்படி செய்வதும் அவர்களுடைய கடமையாகும். கதர் வேலையைப்பற்றிப் புதிதாக வகுக்கப்பட்டுள்ள திட்டத்தில் பருத்தியைப் பயிர் செய்வதிலிருந்து துணியை நெய்வது வரையுள்ள சகல காரியங்களும் அடங்கும். இவைகளையெல்லாம் அறிவோடு செய்யக்கூடியவராயும் ராட்டினத்தையும் அதன் கதிரையும் பழுது பார்க்கக் கூடியவராயும் உள்ள ஊழியர் எவருக்கும் சாப்பாட்டுக்குப் பணம் சம்பாதிப்பதிலும் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதிலும் எவ்வித கஷ்டமும் ஏற்பட மாட்டாது. கதர் வேலைக்கு பங்கமில்லாமலே அவர் சாதாரணமான சிறிய நோய்களுக்குச் சிகிச்சை செய்யவும் கிராமத்தின் சுகாதாரத்தைக் கவனித்துக் கொள்ளவும் முடியும். கல்வியைக் கைத்தொழில் மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டி யிருப்பதால் அதையும் கதர் வேலையிலிருந்து பிரித்துவிட முடியாது. கல்வி பெற வருகிறவர்கள் கதர் கட்டவும் வேண்டும். கதர் மூலமாக கல்வியைப் பெறவும் வேண்டும்.

கதர் ஊழியர் எவ்வளவு காலத்திற்கு சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்ய வேண்டும் என்பது இரண்டாவது கேள்வி. கதர் ஊழியர் ஆரம்பத்திலிருந்தே பிறரை எதிர்பாராமல் வாழக்கூடியவராக இருக்கவேண்டு மென்பது என்னுடைய அபிப்பிராயம். அது சாத்திய மில்லா விட்டால் அவர் தாமாகவே ஒரு கால வரையறை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அது ஐந்து வருஷங்களுக்கு அதிகமாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஐந்து வருஷ காலத்திற்குள் தமக்கு வேண்டியதைத் தாமே சம்பாதித்துக்கொள்ளக் கூடியவராக ஆக வேண்டிய ஊழியர் வருஷா வருஷம் தமக்குக் கொடுக்கப்படும் பணத்தை குறைத்துக் கொண்டே வரவேண்டும். ஐந்து வருஷ காலத்தின் இறுதியில் திடீரென்று தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்ளக்கூடிய சக்தி பெறக் கூடியவராக ஆய்விடுவோம் என்று எதிர்பார்க்க முடியாது. கவனமாகப் பழகிப் பழகி பயிற்சி பெறவேண்டிய வித்தையாகும். பிறருக்குக் கற்றுக் கொடுப்பவர் தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்பவராக இருக்க வேண்டியது அவசியமாகும்.

பாஞ்சகனி 28—7—46. மோ. க, காந்தி

(ஹரிஜன பந்துவிலிருந்து)

மந்திரிகளும் ரேஷனும்

கேள்வி:—மாகாண கவர்னர்கள் தங்களுக்கு ஆலோசனையாளராக நியமித்திருந்த உத்தியோகஸ்தர்கள் உணவு விஷயத்தைக் கவனித்து வந்த காலத்தில் அது சம்பந்தமாக ஏற்படும்ஊழல்களை பயனுறத் தடுப்பதற்கு விதி எதுவும் இல்லாம லிருந்தது. ஆனால் இப்பொழுது ஜனங்களுக்குக் கட்டுப்பட்ட மாகாண சர்க்கார்களுடைய நிலைமை வேறு. காங்கிரஸ் மந்திரிகள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை மற்றவர்கள் வாங்கும் ரேஷன் கடைகளிலிருந்து வாங்கிக் கொள்வதும் எங்கிருந்தேனும் ஒரு தானியமணியேனும் அதிகமாக வாங்கிக் கொள்ளாதிருப்பதும் அவசியமல்லவா ? இதற்கு மாறாக நடப்பதை அவர்கள் அதர்மமாக எண்ணிக் கொள்ள வேண்டுமல்லவா ? இந்த மாதிரியாக நடந்தால் அது உடனேயே அதிகமான பலனை தந்துவிடும். இப்பொழுது தான்யங்களையும் துணிகளையும் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சர்க்கார் காரியாலயங்க ளெல்லாம் களவும் லஞ்சமும் குடிகொண்டுள்ள இடங்களாகவே ஆகிவிட்டன. மேலே கூறியபடி மந்திரிகள் நடந்தால் அவர்களுக்கு அதிகமான ஆத்மீகச் சக்தி உண்டாகும். அந்தச் சக்தியைக்கொண்டு அவர்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள தீமைகளை யெல்லாம் எளிதில் ஒழித்து விடலாம்.

பதில் :—மேலே இந்தக் கேள்வியில் கூறப்பட்டுள்ள யோசனையை நான் பரிபூரணமாக ஏற்றுக் கொள்கிறேன். இந்தயோசனையில் கூறியுள்ள படியே மந்திரிகள் மட்டுமின்றி மற்ற எல்லாச் சர்க்கார் உத்யோகஸ்தர்களும் நடந்துவருவார்களென்று எண்ணுகிறேன். உணவுப்பொருள்களை ரேஷன் கடையில் வாங்காவிட்டால்கள்ளமார்க்கெட்டில்தானே வாங்க வேண்டும். உணவுவாங்குவதற்கு இதைத்தவிற வேறு இடமறியேன். அதிகாரத்திலுள்ளவர்கள் சரியான படி நடந்து கொள்வதைப் போல எந்த உபதேசமும் பயன்தராது. சாதாரண ஜனங்கள் வாங்கும் ரேஷன் கடைகளிலேயே மந்திரிகளும் வாங்கினால் கடைக்காரர்கள் கெட்ட சரக்குகளை விற்பதில் லாபமில்லை என்பதைச் சீக்கிரமாகக் கண்டுகொள்வார்கள். மந்திரிகள் அப்படிச் செய்வதுதான் சரியான காரியமாகும். அந்த மாதிரி சாதாரண ரேஷன் கடைகளில்தான் இங்கிலாந்திலுள்ள மந்திரிகளும் இதர பெரிய உத்யோகஸ்தர்களும் தங்களுக்குரிய உணவுப் பொருள்களை வாங்கிக் கொள்ளுகிறார்கள் என்று அறிகிறேன்.

பாஞ்சகனி, — 28-7-46 — மோ. க. காந்தி.

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை 17.